**Starting time 11.30 A.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 171/2018

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court on 04.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்தன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால், ஆமாம். கூட்டுக்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வது சம்மந்தமாக நானும் எனது சித்தப்பாவும் எத்தனை பதிவு செய்யப்படாத பத்திரங்கள் எழுதிக் கொண்டோம் என்றால், 3. அந்த 3 ஆவணங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், ஒப்படைத்துள்ளேன். பி.வா.சா.ஆ. 8 ஆவணத்திற்கு மறுப்பயன் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை.

2. பி.வா.சா.ஆ. 8 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றாலும், அதை அனுமதியாகத்தான் கருத முடியும் என்றாலும், கூட்டுக்குடும்ப அங்கத்தினர்களுக்கு அது பொருந்தாது என்றாலும், சரியல்ல. கூட்டுக்கிணற்றில் ஒரே ஒரு மின் மோட்டார் தான் உள்ளது என்றாலும், அதன் மின் இணைப்பு எண். 730 என்றாலும், அதை பயன்படுத்தி தான் தண்ணீர் எடுக்க முடியும் என்றாலும், சரிதான். என் தகப்பனார் தனது பெயரில் இருந்த மின் இணைப்பை பெருமாள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொடுத்துவிட்டார் என்றால், ஆமாம்.

3. அந்த கிணற்றுக்கு எங்களுக்கு தனி மின் இணைப்போ மின் மோட்டாரோ இல்லை என்றால், ஆமாம். கூட்டுக்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு எனது சித்தப்பா எனக்கு

அனுமதி அளித்தால் தான் செய்யமுடியும் என்றால், ஆமாம். எனது சித்தப்பா எனக்கு அனுமதி கொடுக்கவில்லை என்றோ, எங்களுக்கும் கூட்டுக்கிணற்றில் பங்கு இருக்கிறது என்றோ வழக்கில் சொல்லவில்லை என்றால், ஆமாம். எனது சித்தப்பாவிற்கு அவருக்கு சொந்தமாக போர்வெல் கிணற்றுக்கு மின் இணைப்பு அமைத்துக் கொள்ள அனுமதி கொடுக்கக்கூடாது என மின்சார வாரியத்திற்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால், இல்லை.

4. புல எண். 206/4 சி-ல் உள்ள கிணற்றுக்கான மின் இணைப்பு விவசாய இலவச மின் இணைப்பு என்றால், ஆமாம். அவ்வாறு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை அரசாங்கதிற்கும் மின்வாரியத்திற்கும் தெரியாமல் அந்த கிணறு சம்மந்தப்படாத வேறு நிலங்களுக்கு பயன்படுத்துவது தவறு என்றால், சரியல்ல. எனது சித்தப்பாவிற்கும் எங்களுக்கும் புல எண். 206/4 சி-ல் உள்ள கூட்டு கிணற்றுக்கு எங்கள் பெயரில் தனியாக ஒரு மின் இணைப்பு பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் இருந்ததா என்றால், இருந்தது. ஆனால் எங்களுக்கு 32 செண்ட் நிலம் மட்டுமே இருந்ததால் எங்களால் தனியாக மின் இணைப்பு பெற முடியைவில்லை. மேற்பாடி விவரத்தையும் எனது வழக்கில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும், பிரதிவாதி வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 11.43 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.